
# பயனர் கையேடு



CDMS

## ஸ்டோர் மேலாளர்


ஸ்டோர் மேலாளர் செயலி கீழ்கண்ட செயல்முறைகளை தன்னிச்சையாக நடைபெற தளம் அமைத்து தருகிறது

| | | |
|---|---|---|
| 1.**ஆர்டர் மேலாண்மை** | 2. **விற்பனை மேலாண்மை** | 3. **உதிரிகள் விரைவுத் தேடல்** |
| 4. **இருப்பு இடமாற்றம்** | | |

## செயலியை நிறுவ தேவையானவை:

- ஆண்ட்ராய்ட் 4.4-க்கு பிந்தைய வடிவுரு


செயலியை நிறுவுவது எப்படி?






1. பிளே ஸ்டோரிலிருந்து செயலியை பதிவிறக்கம் செய்யவும்.


2. முக்கிய தகவல்கள் ஏற்றப்படும்போது இடையூறுகள் இல்லாமல் இருப்பதை உறுதிசெய்யுங்கள். அதாவது மற்ற செயலிகளுக்கு செல்லுதல், செயலியை மூடுதல்(பின்னணியிலிருந்து செயலியைநீக்குவது), இணையத் தொடர்பு தடைபடுதல் போன்றவற்றை தவிருங்கள்.


3. கீழ்காணும் ஏழு தெரிவுகளுக்கும் அனுமதி அளியுங்கள்:






















- செயலி உள்நுழைவு பக்கத்திற்கு இட்டுச் செல்லும்.


*செயலியை நிறுவும்போது சில அனுமதிகளை மறுத்திருந்தால் அவற்றை அமைப்புகள் பக்கத்தில் மாற்றிக்கொள்ளலாம்.*



**ஸ்டோர் மேலாளர் செயல்முறை பாய்வு**










**1.முகப்புத் திரை** **2.பட்டி** **3.நிர்வாக மையம்**

## *உள்நுழைதல்*


*டீலர் உள்நுழைவு அடையாளத்தை உருவாக்குவார்.*

- முன்பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணை பயன்படுத்தி ஸ்டோர் மேலாளர் புகுபதிகையை செய்வார்.
- எண் பதியப்பட்ட/உள்ளீடு செய்யப்பட்ட பின் குறுஞ்செய்தி மூலம் பெறப்படும் ஒடிபியை, செயலி தன்னிச்சையாக எடுத்துக்கொள்ளும். ஸ்டோர் மேலாளர் ஒடிபியை கைமுறையாகவும் உள்ளீடு செய்யலாம்.
- கோரிக்கை வைக்கப்பட்டு 2 நிமிடங்களுக்குள் ஒடிபி உள்ளீடு செய்யப்படவேண்டும்..
- ஸ்டோர் மேலாளர் ஒடிபி வந்திராவிட்டால், அவர் குறுஞ்செய்தி மூலம் ஒடிபியை அனுப்பும்படி கோரலாம், அதே அலைபேசி எண்ணுக்கு ஒடிபி அனுப்பிவைக்கப்படும்.
- ஒடிபி சரிபார்க்கப்பட்ட பின்னர் (ஒருமுறை மட்டும்), ஸ்டோர் மேலாளர் செயலியை பயன்படுத்த முடியும்.
- ஒடிபி சரிபார்க்கப்பட்ட பின்னர், ஸ்டோர் மேலாளர் செயலியை பயன்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது.


உள்நுழைவு பக்கம்




அலைபேசி எண்ணை உள்ளீடு செய்யவும்





ஒடிபியை உள்ளீடு செய்க





ஓடிபியை மீண்டும் அனுப்பவும் (கிடைக்காவிட்டால்)

ஓடிபி சரிபார்ப்பு

மையங்களையும் தரவுகளையும் ஏற்று




- உள்நுழையும் நேரத்தில், ஸ்டோர் மேலாளர் தொடர்பான அனைத்து முக்கியத் தகவல்கள் மற்றும் பரிவர்த்தனை விவரங்கள் ஏற்றப்படும்.

- ஒரு வேலையை முடித்தபிறகு, அடுத்த பணிக்கு செல்வதற்கு முன்னதாக ஒத்திசைவு செய்துகொள்ளுங்கள்.

# பட்டி

ஸ்டோர் மேலாளர் செயலி வெற்றிகரமாக உள்நுழைந்த பின்னர், முகப்பு பக்கம் கீழ்கண்ட அம்சங்களுடன் காணப்படும்:

### 1 ஆர்டர் மேலாண்மை:


ஆர்டர் மேலாண்மை, புதிய ஆர்டர் உருவாக்க, வழிவகை செய்கிறது. எனது ஆர்டர், ஆர்டர் சுவடுபற்றல் மற்றும் கழிந்துவிட்ட ஆர்டர்களை காணவும் முடியும்.

### 2 விற்பனை மேலாண்மை:

விற்பனை மேலாண்மை உதிரி விற்பனை, திருப்பப்பட்ட உதிரி, மற்றும் இருப்பு மாற்றத்தை காட்டும்.

### 3 உதிரிகள் விரைவுத் தேடல்:


உதிரிகளின் இருப்பு குறித்து விரைவாக தெரிந்துகொள்ள உதிரி விரைவு தேர்வு வழிவகுக்கிறது.


ஸ்டோர் மேலாளர்
ஆர்டர் மேலாண்மை
விற்பனை மேலாண்மை
உதிரி விரைவுத் தேடல்
விற்பனை சுருக்கம்
புதிய ஆர்டர்
எனது ஆர்டர்கள்
ஆர்டர் சுவடுபற்றல்
கழிந்த ஆர்டர்கள்
உதிரி விற்பனை
திரும்பிய ஆர்டர்கள்
இருப்பு மாற்றம்

## ஆர்டர் மேலாண்மை

ஆர்டர் மேலாண்மை, புதிய ஆர்டர் உருவாக்க, வழிவகை செய்கிறது. எனது ஆர்டர், ஆர்டர் சுவடுபற்றல் மற்றும் கழிந்துவிட்ட ஆர்டர்களை காணவும் முடியும்.

புதிய ஆர்டரை உருவாக்க பின்வரும் வழிமுறையை பின்பற்றவும்:




**புதிய ஆர்டர்:** புதிய ஆர்டரை உருவாக்க கீழுள்ள வழிகளை பின்பற்றவும்:


1 "புதிய ஆர்டர்"-ஐ கிளிக் செய்யவும்->ஆர்டர் வகையையும் போக்குவரத்து முறையையும் தேர்வு செய்யவும்


2. "உதிரி தேர்வு அல்லது காபி பிஓ"வை கிளிக் செய்யவும்

- "உதிரியை தேர்வு செய்யவும்"-ஐ கிளிக் செய்யவும்
- உதிரி பாகத்தை ஸ்கேன் செய்யவும் அல்லது பாகத்தின் எண்ணை உள்ளீடு செய்யவும்.
- அதே போன்ற பாக எண் காண்பிக்கப்படும்
- நீங்கள் வாங்க விரும்பும் பாகங்களுக்கு "கார்ட்டில் சேர்க்கவும்"-ஐ கிளிக் செய்யவும் (பயனர் ஆர்டர் செய்யும் அளவை கூட்டவோ குறைக்கவோ முடியும்)
- "கார்ட்டுக்கு செல்லவும்" –ஐ கிளிக் செய்யவும். தேர்வு செய்யப்பட்ட பாகங்களையும், மொத்த பொருட்களையும், மொத்த எண்ணிக்கையையும், மொத்த தொகையையும் கார்ட் காட்டும்.

3. ஆர்டரை சேமிக்க "சேமித்து மூடவும்"-ஐ கிளிக் செய்யவும்/ ஆர்டரை உறுதி செய்ய"ஆர்டரை உறுதி செய்யுங்கள்" –ஐ கிளிக் செய்யுங்கள்.




## கழிந்த ஆர்டர்

*ஸ்வராஜிடமிருந்து ஒரு டீலர் ஆர்டர் செய்து 25 நாட்களுக்குள் வந்து சேராத பாகங்களின் நில்சி குறித்து கழிந்த ஆர்டர் காட்டும்.*




## எனது ஆர்டர்



*எனது ஆர்டர் பகுதி ஆர்டர்கள்"உறுதிசெய்யப்பட்டனவா உறுதி செய்யப்படவில்லையா" எனபதை காட்டும். பயனர்கள் ஆர்டர்களை பின்பற்ற முடியும்.*



## ஆர்டர் பின்பற்றல்

ஆர்டர் பின்பற்றல் பயனரை எனது ஆர்டர் பகுதிக்கு இட்டுச்செல்லும். அங்கு கீழ்கண்ட விவரங்கள் மூலம் ஆர்டரை பின்பற்ற இயலும்:




| உறுதிசெய்யப்பட்டது | நிராகரிக்கப்பட்டது |
|---|---|
|  |  |

## விற்பனை மேலாண்மை

உதிரி விற்பனை, உதிரி திருப்பப்பட்டது, இருப்பு மாற்றம் ஆகியவை விற்பனை மேலாண்மையில் காட்டப்படும்.

உதிரிகள் விற்பனை → உதிரிகள் திருப்பம் → இருப்பு மாற்றம்

### உதிரி விற்பனை

உதிரி விற்பனை – விற்பனை வகை, விற்பனை வரலாறு உள்ளிட்டவற்றை காட்டும். உதிரி விற்பனையில் கீழ்கண்டவை இடம்பெறும்:


| | | |
|---|---|---|
| கவுண்ட்டர் விற்பனை / வந்து வாங்கிச் சென்றது | பணிமனைக்கு அனுப்பப்பட்டது | டீலருக்கு அனுப்பப்பட்டது |
| பிரோஃபார்மா விற்பனை | உதிரிகள் விற்பனை வரலாறு | |


### கவுண்டர் விற்பனை/ வந்து வாங்கிச் சென்றது


கவுண்டர் விற்பனை/ வந்து வாங்கிச் சென்றது புதிய வாடிக்கையாளரை உருவாக்குவதற்கானது.

புதிய வாடிக்கையாளரை உருவாக்க கீழ்கண்ட வழியை பின்பற்றவும்:

புதிய வாடிக்கையாளாரை சேர்க்கவும் → அனைத்து தகவலையும் உள்ளீடு செய்யவும் → "சேமி"யை கிளிக் செய்யவும்








## ***பணிமனைக்கு அளிக்கப்பட்டது***

*நிலுவையில் உள்ள எல்லா ஜாப் கார்டுகளையும் பார்த்து உதிரிகளை விடுவிக்கலாம்.*


*ஒரு ஜாப் கார்டை விடுவிக்க கீழ்கண்ட முறையை பின்பற்றவும்:*

- பணிமனைக்கு அளிக்கப்பட்டதை கிளிக் செய்யவும்
- "நிலுவையில் உள்ள அனைத்து ஜாப் கார்டுகளையும் பார்"-ஐ கிளிக் செய்யவும்
- ஒரு ஜாப் கார்டை கிளிக் செய்யவும்."கூடுதல் உதிரிகளை சேர்க்கவும்"-ஐ கிளிக் செய்து கூடுதல் உதிரிகளை விடுவிக்கலாம்.
- ஜாப் கார்டைவிடுவிக்க "விடுவிக்கவும்" விசையை கிளிக் செய்யவும்



## ***டீலருக்கு விற்பனை***


*டீலருக்கு உதிரி விற்பனையை உருவாக்க பின்வரும் நடைமுறையை பின்பற்றவும்*

| | | |
|---|---|---|
| 1. *"டீலருக்கு"-ஐ கிளிக் செய்யவும்->ஒரு டீலரின் பெயரை தேடவும் ->ஒரு பதிவை கிளிக் செய்யவும்* | 2. *ஒரு பாகத்தை ஸ்கேன் செய்யவும், அல்லது ஒரு பாகத்தின் எண்ணை உள்ளீடு செய்யவும். பாகத்தை கார்டில் இணைத்து, "கார்ட்டுக்குசெல்லவும்"-ஐ கிளிக் செய்யவும்* | 3. *ஆர்டரை சேமிக்க "பிரோஃபார்மாவாக சேமி"ஐ கிளிக் செய்யவும்-> "விலைசிட்டை உருவாக்கு"-ஐ கிளிக் செய்யவும்.* |
|   |   |   |

**பிரோஃபார்மாக்களை சேமிக்கிறது**

உதிரி விற்பனை பிரோஃபார்மா நிலுவையில் உள்ள மற்றும் உருவாக்கப்பட்ட விலைச்சிட்டைகளை காட்டும். உறுதி செய்யப்பட்ட ஆர்டர் விவரங்களை பயனர் கீழ் கண்டபடி காணமுடியும்.

| விற்பனை வகை | விலைச்சிட்டை எண் | விலைசிட்டை தேதி | விலைச்சிட்டை வகை |
|---|---|---|---|
| பாக எண் மற்றும் ஆர்டர் எண்ணிக்கை | மொத்த உருப்படிகள் | மொத்த எண்ணிக்கை | மொத்தத் தொகை |



**உதிரிகள் திருப்பப்படுவது**


உதிரிகளை திரும்பி அனுப்பவதற்கு கீழ் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறையை பின்பற்றவும். உதிரிகள் திருப்ப அனுப்புவது கீழ்கண்ட வகையில் இருக்கும்:

- டீலரிடமிருந்து நிறுவனத்திற்கு / விநியோகஸ்தருக்கு
- வாடிக்கையாளரிடமிருந்து கிளைக்கு / டீலருக்கு

**டீலரிடமிருந்து நிறுவனம், விநியோகஸ்தருக்கு**

டீலரிடமிருந்து நிறுவனத்திற்கு அல்லது விநியோகஸ்தருக்கு உதிரிகளை திருப்பி அனுப்புவதற்கு கீழ்கண்ட முறையை பின்பற்றவும்

1. "விலைச்சிட்டை எண் அல்லது விநியோகஸ்தர் பெயர்"-ஐ தேர்வு செய்யவும்
2. "விலைச்சிட்டை எண் அல்லது விநீயோகஸ்தர் பெயரை" உள்ளீடு செய்யவும்
3. பதிவை கிளிக் செய்யவும்.
4. "திருப்பி அனுப்பும் விலைச்சிட்டையை உருவாக்கு:-ஐ கிளிக் செய்யவும்.



**_வாடிக்கையாளரிடமிருந்து கிளை/டீலருக்கு_**

_வாடிக்கையாளரிடமிருந்து கிளை அல்லது டீலருக்கு உதிரிகளை திருப்பி அனுப்ப பின்வரும் முறையை பின்பற்றவும்:_

வாடிக்கையாளரிடமிருந்து கிளை/டீலருக்கு உதிரிகளை திரும்ப அனுப்புவை கிளிக் செய்யவும். → "கடைக்கு வந்தது/பணிமனை/டீலர்"-ஐ தேர்வு செய்யவும்

**_கடைக்கு வந்தது_**


_-"விலைச்சிட்டை எண் அல்லது விநியோகஸ்தர் பெயர்"ஐ உள்ளீடு செய்யவும்._
_-பதிவை கிளிக் செய்யவும். ஆர்டர் விவரம், பாக எண் ஆகியவை காட்டப்படும்_
_-"திருப்பும் விலைச்சிட்டையை உருவாக்கவும்"ஐ கிளிக் செய்யவும்._


**_பணிமனை_**


_-"விலைச்சிட்டை எண் அல்லது விநியோகஸ்தர் பெயர்"ஐ உள்ளீடு செய்யவும்._
_-பதிவை கிளிக் செய்யவும். ஆர்டர் விவரம், பாக எண் ஆகியவை காட்டப்படும்_
_-"திருப்பும் விலைச்சிட்டையை உருவாக்கவும்"ஐ கிளிக் செய்யவும்._

**_டீலர்_**

_-"விலைச்சிட்டை எண் அல்லது விநியோகஸ்தர் பெயர்"ஐ உள்ளீடு செய்யவும்._
_-பதிவை கிளிக் செய்யவும். ஆர்டர் விவரம், பாக எண் ஆகியவை காட்டப்படும்_
_-"திருப்பும் விலைச்சிட்டையை உருவாக்கவும்"ஐ கிளிக் செய்யவும்._



# இருப்பு இடமாற்றம்


இருப்பை இடம்மாற்ற கீழ்கட்ட நடைமுறையை பின்பற்றவும்


காட்சி அரங்கிலிருந்து டீலருக்கு | காட்சி அரங்கிலிருந்து கிளைக்கு


### *காட்சி அரங்கிலிருந்து டீலருக்கு*

*காட்சி அரங்கிலிருந்து டீலருக்கு இருப்பு இடமாற்றத்திற்கு பின்வரும் முறையை பின்பற்றவும்*

| | | |
|---|---|---|
| -"டீலர்கள் அளாவில் தேடு"ஐ கிளிக் செய்யவும், பின்னர் "பெயர்/இடம்/டீலர் கோட்"ஐ தேர்வு செய்யவும்<br>-ஒரு டீலரின் பெயரை உள்ளீடு செய்யவும்<br>-ஒரு டீலரை கிளிக் செய்யவும் | -பார்கோடை ஸ்கேன் செய்யவும் அல்லது பாகத்தின் எண்ணை உள்ளீடு செய்யவும்<br>-ஒரு பாகத்தை சேர்க்க "கார்ட்டில் சேர்க்க"ஐ கிளிக் செய்யவும். "கார்ட்டுக்கு செல்லவும்"ஐ கிளிக் செய்யவும். | -"விலைச்சிட்டையை உருவாக்கு"ஐ கிளிக் செய்யவும். |












## காட்சி அரங்கிலிருந்து கிளைக்கு

காட்சி அரங்கிலிருந்து கிளைக்கு இருப்பை இடமாற்றம் செய்ய கிழ்கண்ட வழிமுறையை பின்பற்றவும்

| | | |
|---|---|---|
| -"கிளை வாரியாக தேடு"ஐ கிளிக் செய்து "பெயர்/இடம்"த்தை தேர்வு செய்யவும்<br>-ஒரு கிளையின் பெயரை உள்ளீடு செய்யவும்<br>-ஒரு கிளையின் பதிவை கிளிக் செய்யவும் | -பார்கோடை ஸ்கேன் செய்யவும் அல்லது பாகத்தின் எண்ணை உள்ளீடு செய்யவும்<br>-ஒரு பாகத்தை சேர்க்க "கார்ட்டில் சேர்க்க"ஐ கிளிக் செய்யவும். "கார்ட்டுக்கு செல்லவும்"ஐ கிளிக் செய்யவும். | -"விலைச்சிட்டையை உருவாக்கு"ஐ கிளிக் செய்யவும். |








# விரைவு தேடல்

விரைவுத் தேடலை பயன்படுத்த கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறையை பின்பற்றவும்

1. விநியோகஸ்தர் வகையை தேர்வு செய்யவும்
2. ஒரு பாகத்தின் எண்ணை உள்ளீடு செய்யவும் அல்லது ஒரு பார்கோடை ஸ்கேன் செய்யவும்
3. ஒரு பாகத்தின் பதிவை கிளிக் செய்யவும்




பயனர் கீழ்கண்டவற்றையும் சரிபார்க்கலாம்:

| பாகம் இருப்பு | இருப்பு பிரிவு | பிரச்னைகள் |
|---|---|---|
| ஒரு பாகத்தின் மொத்த இருப்பு, குறிப்பிட்ட இடத்தில் இருப்பு, இருப்பு எண்ணிக்கை ஆகியவற்றை பாகம் இருப்பு காட்டும். | இருப்பு பிரிவு பார்வை கீழ்கண்டவாறு காட்டும் | பாக எண்ணுடன் பிரச்னைகள் கீழ் கண்டவாறு காட்டப்படும்: |

